*2023 மார்ச் 27]*

*அவர்கள் இன்றைக்கு திருவண்ணாமலை மாவட்டத்திற்கு கால்நடை மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்றவாறு அதை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாவட்ட அமைச்சரிடம், மிக கவனமாக கால்நடை மருத்துவக் கல்லூரியை கொடுத்துவிடுவீர்கள் என்றுதான் கேட்கிறார்.*

*வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**44—**

**கதர் கிராமத் தொழில் அலகு**

***1902—திருமதி ஆ. தமிழரசி:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மானாமதுரை தொகுதியில் கதர் கிராமத் தொழில் அலகு அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களில் கதர் அங்காடி விற்பனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. காரைக்குடி அருகேயுள்ள கண்டனூர் கதர் வளாகத்தில் கதர் தொழில் மையங்கள் அமைத்திட, வாரியத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிவகங்கை மாவட்டத்தில், மேற்கண்ட இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மானாமதுரையில் கதர் வாரியத்தில் பதிவு செய்யப்பெற்ற மண்பாண்டத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஆகவே, புதிதாக வேறு ஒரு கதர் கிராமத் தொழில் மையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

[2023 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.

**திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம் நான்கு தொகுதிகளை உள்ளடக்கியது. எங்களுடைய மானாமதுரை பகுதி என்பது, மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. கடந்த ஆண்டுகளில் எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்படாமல், இந்தப் பகுதி இன்றும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு சொன்னதைப்போல சிவகங்கை, காரைக்குடி பகுதிகளில், அலகுகள் ஆரம்பிக்கப்பட்டு, அங்குள்ள மக்களுக்கு பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எங்களுடைய தொகுதி என்பது, கிராமப்புறங்கள் நிறைந்த பகுதி. இங்குள்ள பெண்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக கைவினைப் பொருட்களை அதிகமாக தயாரிக்கின்றனர்.

அதேபோல் இளையாங்குடி பகுதியில் உள்ள நெசவாளர்களும் பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்கின்றனர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, மானாமதுரை பகுதியில் உள்ள மண்பாண்டத் தொழிலாளர்கள் இங்கு அதிகளவில் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். ஆகவே, உற்பத்தி செய்கின்ற பொருட்களையும், விற்பனை செய்வதற்கான அலகு கூடத்தையும் ஒன்றிணைத்து இந்தப் பகுதி மக்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில் ஓர் ஒருங்கிணைந்த அலகு–unit–ஐ உருவாக்கித்தர வேண்டுமென்று அன்போடு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் துறை என்பது ஒரு சிறப்பான துறை. ஏழை, எளிய மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுகின்ற ஒரு நல்ல துறை. மானாமதுரையில் palm craft என்கிற கதர்

*2023 மார்ச் 27*]

விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவிருக்கிறோம். பனை வெல்லம் மற்றும் கதர் பொருட்கள் எல்லாம் அந்த அங்காடியில் விற்பனையாக இருக்கின்றன. இந்தத் துறைக்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்க்கான சொத்துகளும் இருக்கின்றன. ஆகவே, கதர் கிராமப் பொருட்களைப் பொறுத்தவரையில் மானாமதுரையில், palm craft என்று சொல்லப்படுகின்ற கதர் அங்காடி ஒன்று செயல்படவிருக்கிறது.

அதேபோல, மானாமதுரையில் மண்பாண்டத் தொழிலாளர்கள் 443 பேர் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய வருமானம் ரூ.15 இலட்சம். அந்தத் தொகை அரசுக்கு வருகிறது. அரசுக்குப் பணம் ஈட்டக்கூடிய தொழில் அங்கே நடைபெற்று வருகிறது. ஆக, இப்படிப்பட்ட தொழில்களெல்லாம் அந்தப் பகுதியில் இருக்கின்றன. எதிர்காலத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, இந்தத் துறையினுடைய செயல்பாடுகளை விரிவாக்கி, என்னென்ன செய்ய முடியுமோ, அதை அடித்தள மக்களுக்குச் செய்ய இந்த அரசு விரும்புகிறது. நிச்சயமாக, இந்த அரசு அதைச் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருகிறோம் என்று சொல்லிவிட்டார்களே! நன்றி சொல்லி அமருங்கள்.

**திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, மானாமதுரை பகுதியில் தயாரிக்கின்ற மண்பாண்டங்கள் உலகப் பிரசித்திபெற்றவை. அதிலும், மானாமதுரையில் தயாரிக்கின்ற கடம், உலக அளவில் பிரசித்திபெற்றது. மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் கையால் விருது வழங்கப்பெற்றுள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் என்று சொல்வதைக் காட்டிலும், வரும் ஆண்டிலேயே தாயுள்ளம் கொண்ட அரசில் அதை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று எங்கள் தொகுதி மக்களின் சார்பாக தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியபடி, மானாமதுரையில் நாம் ஒரு பயிற்சி மையம் ஆரம்பிக்கவிருக்கிறோம். பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வை அங்கே கொண்டுவருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, வருகின்ற காலங்களில் செய்யவிருக்கிறோம். ஆகவே, நிதிநிலைமைக்கேற்ப, இருக்கின்ற சூழ்நிலைக்கேற்ப, மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்துபேசி, அந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில், நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே மானாமதுரை தொகுதியில் தொழில்கள் நல்ல முறையில்தான் இயங்கி வருகின்றன என்பதே என்னுடைய கருத்தாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**45—**

**துணை மின் நிலையம்**

***54807—திரு. அ. பண்ணாரி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, ஆசனூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பவானிசாகர் தொகுதி, ஆசனூர் பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. தொழில்நுட்ப சாத்தியக்கூறுகளின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அடுத்த கட்ட நடவடிக்கை